கலந்து கொண்டு அணி யோர்செய்துவருகின்றனர். | கோயில் பூட்டு உடைக்

# பேட்டை அரசு மகளிர் கல்லூரியில் வாக்காளர் விழிப்புணர்வு தினம்




▶ பேட்டை ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரியில் நடந்த தேசிய வாக்காளர் விழிப்புணர்வு தின விழாவில் நடந்த போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு சான்றிதழ், பரிசு வழங்கப்பட்டது.

**பேட்டை,ஜன.25:** பேட்டை ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்டம் சார்பில் நெல்லை மாவட்ட நிர்வாகம், பொதிகை தமிழ் சங்க அறக்கட்டளை இணைந்து தேசிய வாக்காளர் விழிப்புணர்வு தின நிகழ்ச்சியை நடத்தியது. பேராசிரியை உமா தேவி வரவேற்றார். கல்லூரி முதல்வர் மைதிலி தலைமை வகித்தார். நெல்லை தாசில்தார் ராஜேஸ்வரி வாழ்த்தி பேசினார். சிறப்பு விருந்தினராக நெல்லை மாவட்ட துணை ஆட்சியர் சிவகுரு பிரபாகரன் கலந்து கொண்டு பேசுகையில் '18 வயது நிரம்பிய அனைவரும் கட்டாயம் வாக்களிக்க வேண்டியதன் அவசியம்' குறித்து வலியுறுத்தினார். தொடர்ந்து நாட்டு நலப் பணி திட்டம் சார்பில் நூறு சதவிகித வாக்கு பதிவு அவசியம் குறித்து நடந்த ஓவிய போட்டி, கவிதை போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள், சான்றிதழ்கள் வழங்கினார்.

நிகழ்ச்சியில் பொதிகை தமிழ் சங்க தலைவர் கவிஞர் பேரா மற்றும் பேராசிரியர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர். நாட்டு நலப்பணி திட்ட ஒருங்கிணைப்பாளர் ஆனந்த லட்சுமி நன்றி கூறினார்.